DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no:STC.No.05/2024**

**prosecution witness: PW- 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

Accused absent. Petition filed through online.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரின்ஸ் | ஜாதி | : | |
| த/பெ. | : | அந்தோணிராஜ் | தொழில் | : | மீன்பிடி |
| கிராமம் | : | மல்லிகைநகர் | சமயம் | : | கிறிஸ்த்துவர் |
| தாலுகா | : | இராமேஸ்வரம் | வயது | : | 45 |

**23.05.2024**

**முதல்விசாரணை:-**

நான் இராமேஸ்வரத்தில் குடியிருநது வருகிறேன். கடல் தொழில் செய்து வருகிறேன். கடந்த 18.09.2022ம் தேதி தங்கச்சிமடத்திலுள்ள எனது மனைவியின் அண்ணன் வீட்டு பால் காய்ச்சுக்கு நான், எனது மனைவி, எனது இரண்டு குழந்தைகள் சென்று தங்கிவிட்டு மறுநாள் 19.09.2022ம் தேதி பால் காச்சு முடித்துவிட்டு மாலை 06.30 மணிக்கு பிரண்ட்ஸ் மஹாலில் இருந்து நானும், எனது மனைவியும், இரண்டு குழந்தைகள் எனது இருசக்கர வாகனத்தில் அங்கிருந்து இராமேஸ்வரம் நோக்கி வந்தோம்.

2.அப்போது தண்ணீர் ஊற்று வளைவில maxi truck ,இண்டிகேட்டர் எதுவும போடாமல் பின்புறமாக வேகமாக வந்தது. மெயின்ரோட்டில் வந்ததால் எனக்கு தெரியவில்லை. வண்டியில் இருந்த பைப ஆங்கிள் எனது முகத்தில குத்தி விட்டது. பைக்கோடு தூக்கி போட்டு விட்டது. எனக்கும், எனது மனைவிக்கும் காயம் ஏற்பட்டது. மயங்கி கீழே விழுந்துவிட்டேன். அந்த வழியாக வந்த என் மனைவியின் அண்ணன் நாங்கள் விழுந்து கிடப்பதை பார்த்து விட்டு என்னையும், எனது மனைவியையும் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்.

3.அதன்பின்பு மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் ஆசிக் மருத்துவமனையில் சேர்த்தார்கள். இரண்டு மாதமாக மருத்துவமனையில் இருந்தேன். தலையில் பிளேட் வைத்தார்கள். இடது கண் சரியாக பார்வை இல்லை. இடது காலில்

A.Prince

அடிபட்டதால் சரியாக நடக்கமுடியவில்லை. வேலைக்கு சென்று இரண்டு வருடமாக ஆகிவிட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிர்தரப்பு குறுக்கு விசாரணை:-**

அ.சா.1 எனது மனைவியாவார். விபத்து நடந்தபோது இருட்டான நேரம், இருட்டு பகுதி என்றால சரிதான். நாங்கள் வந்த இருசக்கர வாகனத்தில் இரண்டு பேர் தான் பயணம் செய்யவேண்டும், நான்கு பேர் சட்டப்படி தவறு என்பது எனக்கு தெரியும் என்றால சரிதான். எனக்கு ஓட்டுநர் உரிமம் இருக்கிறதா என்றால இருககிறது. எனது இருசக்கர வாகனத்திற்கு இன்சூரன்ஸ்,பெர்மிட் எல்லாம் உள்ளது. விபத்து நடந்தபின்பு நான் மயக்க நிலையில் தான் இருந்தேன் என்றால சரிதான். அப்போது போலீசா என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான் மனைவியிடம் வாங்கினார்கள்.

2.எதிரியின் வாகனம் நின்று கொண்டுதான் இருந்தது என்றால் ரிவர்ஸில் வேகமாக வந்தது. பின்புறமாக வரும் வாகனம் வேகமாக வரும் வாய்ப்பில்லை என்றால் சரிதான் பின்புறமாக வருவதை எதிர்பார்க்க முடியாது. எனக்கு குடிக்கும் பழக்கம் உள்ளது என்றால் இல்லை. விபத்து நடந்த அன்று எனது மைத்துனர் வீட்டு விஷேஷத்திற்கு சென்றுவிட்டு தான் வந்தோம். நான் விஷேஷத்திற்கு சென்றுவிட்டு மது அருந்திவிட்டு எனது கவனக்குறைவினால் நின்று கொண்டிருந்த லாரியின் மோதி விட்டேன் என்றால் சரியல்ல. இதுசம்பந்தமாக இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்து வழக்கு நடந்து கொண்டிருக்கிறது என்றால சரிதான். எனது கவனக்குறைவினால் ஏற்பட்ட விபத்திற்கு எனது மனைவி பொய்யாக புகார் கொடுத்துள்ளார் அதற்கு ஆதரவாக நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

A. Prince

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.05.23 16:44:31 +0530